*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2023** **24 மே 2023**

## பத்திரிகை செய்தி

மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் இன்று (24-05-2023) அரியாங்குப்பம் ஆரம்ப சுகாதார நிலையத்தைப் பார்வையிட்டார். மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மருத்துவ சிகிச்சைக்கான வசதிகள், மருந்துகளின் காலக்கெடு ஆகியவற்றை நேரில் அறிந்துகொண்டார்.

- அனைத்து மருந்துகளும் 2024, 2025 ஆம் ஆண்டு காலக் கெடுவோடு இருப்பதையும் இருப்பு வைக்கப்பட்டுள்ள மருந்துகள் அனைத்தும் தரமான மருந்துகள் என்பதையும் உறுதிபடுத்திக்கொண்டார்.
- இரவு நேரங்களில் மருத்துவர்கள் தேவை என்ற பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று முழுநேர மருத்தவர்கள் நியமனம் செய்யப்படும் வரை முதுகலை பயின்ற பயிற்சி மருத்துவர்கள் இருவரை உடனடியாக பணியமர்த்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். முழு நேர மருத்துவர்கள் பணியமர்த்தப்படுவார்கள் அதுவரை
- மருந்தகங்களில் மக்கள் வரிசையில் காத்து நிற்பதைத் தவிர்ப்பதற்காக கூடுதல் திறப்புகளை (Couters) ஏற்படுத்த உத்தரவிட்டார்.
- மேலும், மருத்துவமனைக்கென்று இசிஜி உபகரணம் வாங்க ஏற்பாடு செய்யவும் அறிவுறுத்தினார்.
- மருத்துவமனைக்கு பின்புறம் உள்ள காலி இடத்தில் படுக்கைகளுடன் கூடிய மருத்துவமனை ஏற்படுத்தினால் பொதுமக்கள் பயன் பெறுவர் என்று சட்டமன்ற உறுப்பினர் முன்வைத்த கோரிக்கையை ஏற்று இந்த மருத்துவமனையை மேம்படுத்துவதற்கான ஒரு திட்ட வரவை உருவாக்கவும் அதன் படி நடவடிக்கைகள் எடுக்க ஆவண செய்யவும் உத்தரவிட்டார்.
- எந்தெந்த வகையில் மருத்துவமனை மேம்படுத்தப்பட வேண்டுமோ அந்த வகையில் மேம்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர்(எ) தட்சணாமூர்த்தி, சுகாதாரத்துறை இயக்குனர் திரு ஸ்ரீராமுலு மற்றும் மருத்துவ அதிகாரிகள் உடனிருந்தனர்.